Registered as a Newspaper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    புரட்டாதி 05    [21-09-1993]    செவ்வாய்க்கிழமை    ஓசை 215

## பல்கலைக்கழக அனுமதிபெறுவோரில் 10 வீதமானோர் பல்கலை. செல்வதில்லை

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறுபவர்களில் 10 சத வீதமானோர் பல்கலைக் கழகங்களுக்குச் செல்வதில்லையென ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. இதற்குக் காரணம் பல்கலைக்கழக அனுமதி தாமதமாகுவதென்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இவர்கள் க. பொ. த. உயர்தரப் பரீட்சை சித்தியடைந்தவுடன் வேறு தொழில்களைப் பெற்று சென்று விடுகின்றனர். சிலர் தாமதம் காரணமாக வெளிநாடுகளில் தொழில் பெற்றுச் செல்கின்றனர். பல்கலைக் கழகத்து உயர் கல்வியைப் பெறச் சென்றால் தங்களுக்குச் செலவுக்காகப் பெருமளவு பணம் தேவைப்படும் எனவும் பலர் கருதுகின்றனர். இதனாலும் இவர்கள் இக்கல்வியைக் கைவிடுகின்றனர் எனவும் அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

# ஓடிய படையை தேடி விசேட படையணி!

## 10,000 சிப்பாய்களை பிடிக்க அரசின் புதிய திட்டம்

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவத்திலிருந்து தப்பியோடிய சிப்பாய்களை கைது செய்ய இராணுவத்தில் புதிதாக விசேட அணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத் தகவலை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ன வெளியிட்டுள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய சுமார் 10,000 படையினரை கைது செய்வதே இந்த புதிய அணியின் பணியாக இருக்கும் என 'லங்காதீப' எனும் சிங்கள தினசரி செய்தி வெளியிட்டுள்ளது. இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த காலம் முதல் இதுவரையில் தப்பியோடிய படையினரில் 2800 பேர் மட்டுமே மீண்டும் இராணுவ பொலிசாரால் கைது செய்யப்பட முடிந்தது. இந்நிலையில் இன்னமும் சுமார் 10,000 தப்பியோடிய படையினரை கைது செய்ய வேண்டியிருப்பதாகவும் இதனாலேயே இவர்களை கைது செய்ய இராணுவத்தின் விசேட அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது எனவும் இராணுவத்தளபதி கூறினார். இதேசமயம் தப்பிச் சென்ற படையினரை கைது செய்யும் பணியில் இராணுவப் பொலிஸ் தொடர்ந்து ஈடுபடும் என்றும் இதற்காக அவர்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்படும் படையினர் வடக்கு கிழக்கு போர் முனைக்கு மீள அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்த தீர்மானம் கடந்த வாரம் நடைபெற்ற பாதுகாப்புமாநாட்டில் எடுக்கப்பட்டதாக இராணுவத்தளபதி சிசில் வைத்தியரட்ன கூறினார்.

# நீண்டகால தாக்குதல் திட்டம் இராணுவம் தயாரிக்கிறதாம்

வடபகுதியில் இடமாத இறுதியில் பாரிய இராணுவ நட... மூலம் இராணுவத்தினர்களும் உபகரணங்களும் யாழ் தீவுப்... அதிகாரிகள் நீண்டகால பாரிய இராணுவ தாக்குதல் திட்ட...

## வீரச்சாவு



கப்டன் பரதன் (பாரத்)

மன்னார் மாவட்டத்தில் நேற்றுக்காலை ஏற்பட்ட வெடிவிபத்து ஒன்றில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் பரதன்.பாரத் [சந்தான் அந்தோனி மகேந்திரன், மாதிரிக்கிராமம் நறுவிலிக்குளம், வங்காலை] எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## துப்பாக்கிப் பிரயோகம்

(தொல்புரம்)

மாதகல் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை 8 00 மணியளவில் தமது காவல் நிலைகளிலிருந்து பண்டத்தரிப்பு, சில்லாலை, சுழி

(4ஆம் பக்கம் பார்க்க)

## றொக்கற் வெடித்த பின்பே வீசப்பட்டதை உணர்ந்தோம்

### முல்லையில் காயமடைந்தவர் தெரிவிப்பு

[நமது நிருபர்]

சன்னம் பட்டதும் அம்மா என அலறியவாறு ... பேர் காயமடைந்ததும் தெரிந்ததே.

# வடபகுதி ஆயர்கள் பிரதமர் சந்திப்பு

## பொருளாதார, போக்குவரத்து தடையை நீக்க கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை யாழ்., மன்னார் மறைமாவட்ட பேராயர்கள் அண்மையில் சந்தித்து பேச்சுகள் நடத்தியுள்ளனர். யாழ். ஆயர் அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம், மன்னார் ஆயர் அதி. வண. இராயப்பு ஜோசப் ஆகியோர் பாராளுமன்ற கட்டடத்தில் வைத்து பிரதமர் ரணிலை சந்தித்து பேச்சு நடத்தினர்.

வடக்கில் சிறிலங்கா படைகளின் நடவடிக்கையினால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் யாழ். குடாநாடு மற்றும் மன்னாரிலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு செல்ல போக்குவரத்து வசதிகள் குறித்தும் பேச்சுகளின் போது ஆயர்களால் எடுத்து விளக்கப்பட்டது. இவர்களது சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நீடித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை முன்னதாக நாட்டிலுள்ள பத்து மறைமாவட்டங்களினதும் ஆயர்கள் கொழும்பில் சந்தித்துப பேச்சு நடத்தினர் எனவும் இந்த சந்திப்பில், யாழ். மன்னார் ஆயர்களும், கிழக்கு மறைமாவட்ட ஆயர் அதி வண, கிங்ஸ்லி சுவாம்பிள்ளையும் கலந்து கொண்டனர் எனவும் தெரியவருகிறது. இதன் போது வடக்கு, கிழக்கு பகுதியில் நிலவும் நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டன.

இச்சந்திப்பின் விளைவாகவே பிரதமர் ரணிலை யாழ். மன்னார் ஆயர்கள் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மனித நடுநிலைமை

## ஸ்தாபன இயக்குநர் ராணுவ தளபதி சந்திப்பு

(கொழும்பு)

மனிதநடுநிலைமைஸ்தாபன இயக்குநர் பிதா ஜெயநேசன் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னவையும் வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை தளர்த்துவது தொடர்பாகவும் வடக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பட்சத்தில்

யாக இருக்கும் என 'லங்கா தீப' எனும் சிங்கள தினசரி செய்தி வெளியிட்டுள்ளது. இரண்டாம் கட்ட ஈழபோர் ஆரம்பித்த காலம் முதல் இதுவரையில் தப்பியோடிய படையினரில் 2800 பேர் மட்டுமே மீண்டும் இராணுவ பொலிசாரால் கைது செய்யப்பட முடிந்தது. இந்நிலையில் இவர்களை கைது செய்ய இராணுவத்தின் விசேட அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது எனவும் இராணுவத்தளபதி கூறினார். இதேசமயம் தப்பிச் சென்ற படையினரை கைது செய்யும் பணியில் இராணுவப் பொலிஸ் தொடர்ந்து ஈடுபடும் என்றும் இதற்காக அவர்களுக்கு கூடுதல் அதிகாரம் படையினர் வடக்கு கிழக்கு போர் முனைக்கு மீள அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்த தீர்மானம் கடந்த வாரம் நடைபெற்ற பாதுகாப்புமாநாட்டில் எடுக்கப்பட்டதாக இராணுவத்தளபதி சிசில் வைத்தியரட்ன கூறினார்.

# நீண்டகால தாக்குதல் திட்டம் இராணுவம் தயாரிக்கிறதாம்

வடபகுதியில் இபமாத இறுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள ஆரம்ப நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக வீரகேசரி வாரப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. திருமலையிலிருந்து கப்பல் மூலம் இராணுவத்தினர்களும் உபகரணங்களும் யாழ் தீவுப் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை கைப்பற்ற தலைமை செயலக அதிகாரிகள் நீண்டகால பாரிய இராணுவ தாக்குதல் திட்டமொன்றை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளதாகவும், வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள முன் முப்படைகளும் தமது ஆள், ஆயுத பலத்தை அதிகரிப்பதில் தீவிரமாக உள்ளதாகவும் அப்பத்திரிகை கூறுகின்றது.

நடைபெறப்போகும் யுத்தம் நீண்டகாலம் தொடரும் என படையினர் எதிர்பார்ப்பதால் யுத்தவேளையில் ஆட்திரட்டலை விட முன்னேற்பாடாக ஆள் திரட்ட திட்டமிட்டுள்ளனர். எனினும் உடனடியாக வடபகுதி மீதான தாக்குதலை ஆரம்பிக்கும் சாத்தியமில்லை எனக்கூறும் இராணுவ ஆய்வாளர்கள் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு முன்பாக புலிகளின் பலத்தை பரீட்சிக்க ஆங்காங்கே சிறிய அளவிலான இராணுவ நடவடிக்கைகளே மேற்கொள்ளப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வடபகுதி படை முகாம்களை சிசில் பார்வையிட்டார்

சிறிலங்காவின் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தின அண்மையில் ஆனையிறவு, பூநகரி, மன்னார், மட்டக்களப்பு பகுதிகளுக்கு சென்று இராணுவமுகாம்களின் நிலை குறித்து ஆராய்ந்ததாக தெரியவருகிறது.

பேலும பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க வடக்கு கிழக்கு இராணுவ அணிகளைப் புதிய வகையில் மாற்றியமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். அத்துடன் முப்படைகளையும் பலப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகிறாராம்.

அடுத்த ஆண்டு ஜூன்மாதத்திற்கு முஙனர் வடக்கு கிழக்குப் பகுதியை விடுதலைப்புலிகளிடமிருந்து கைப்பற்றி விடுவோம் என சிசில் வைத்தியரத்தின கூறியுள்ளார் இதற்கான முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கடற்படையினருக்கு மேலும் நான்கு அதிவேக படகுகள்

சிறிலங்கா கடற்படையினருக்கு மேலும் நான்கு அதிவேகப் பீரங்கிப்படகுகளை நிர்மாணித்துக் கொடுப்பதில் பிரெஞ்சு நிறுவனமொன்று ஈடுபட்டுள்ளது. பிரான்ஸ் ''பைமன் மராஜன்'' எனும் நிறுவனம் கொழும்பு ''டொக் யாட்'' நிறுவனத்துடன் இணைந்து இவ் அதிவேகப் படகுகளை நிர்மாணிப்பதில் ஈடுபட்டுள்ளது.

இவ் அதிவேகப் படகுகள் ஒவ்வொன்றும் 10 கோடிரூபா செலவில் அமைக்கப்படுகின்றது முன்னரும் இவ் இரு நிறுவனங்களும் இணைந்து இரண்டு அதிவேகப் படகுகளை சிறிலங்கா கடற்படையினருக்கு அமைத்துக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களை படையிற் சேர்க்க சிறிலங்கா அரசு முயற்சி

இராணுவத்தில் சேர விரும்பும் மாணவர்களுக்கு ஆரம்ப சம்பளமாக 2500 ரூபா வழங்கப்படும். லெபனான் போன்ற நாடுகளுக்கு சென்று பயிற்சி பெறவும வசதியளிக்கப்படும் 600 ரூபா ஊக்குவிப்பு பணமும் வழங்கப்படும். இவ்வாறு இராணுவ அதிகாரியொருவர் அண்மையில் வவுனியாவின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

வவுனியா வைசவப்பிரகாச வித்தியாசாலையில் கடந்த வெள்ளியன்று நடந்த கூட்டத்திலேயே இராணுவ அதிகாரி மேற்கண்டவாறு கூறினார். வவுனியா நகரில் உள்ள பிரபல பாடசாலைகளில் 10 ஆண்டிற்கு மேல் கல்விகற்கும் தமிழ் சிங்கள.முஸ்லிம் மாணவர்கள் அனைவரும் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டனர்.

தமது விரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## துப்பாக்கிப் பிரயோகம்

(தொல்புரம்)

மாதகல் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுக் காலை 8 00 மணியளவில் தமது காவல் நிலைகளிலிருந்து பண்டத்தரிப்பு, சில்லாலை, சுழி

(4ஆம் பக்கம் பார்க்க)

னர்.

வடக்கில் சிறிலங்கா படைகளின் நடவடிக்கையினால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் யாழ். குடாநாடு மற்றும் மன்னாரிலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு செல்ல போக்குவரத்து வசதிகள் குறித்தும் பேச்சுகளின் போது ஆயர்களால் எடுத்து விளக்கப்பட்டது. இவர்களது சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நீடித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை முன்னதாக நாட்டிலுள்ள பத்து மறைமாவட்டங்களினதும் ஆயர்கள் கொழும்பில் சந்தித்துப பேச்சு நடத்தினர் எனவும் இந்த சந்திப்பில், யாழ். மன்னார் ஆயர்களும், கிழக்கு மறை மாவட்ட ஆயர் அதி வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளையும் கலந்து கொண்டனர் எனவும் தெரியவருகிறது. இதன் போது வடக்கு, கிழக்கு பகுதியில் நிலவும் நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டன.

இச்சந்திப்பின் விளைவாகவே பிரதமர் ரணிலை யாழ். மன்னார் ஆயர்கள் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மனித நடுநிலைமை

## ஸ்தாபன இயக்குநர் ராணுவ தளபதி சந்திப்பு

(கொழும்பு)

மனிதநடுநிலைமைஸ்தாபன இயக்குநர் பிதா ஜெயநேசன் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னவையும் வடபகுதி இராணுவத்தளபதி ஜெரி டி சில்வா ஆகிய இராணுவ உயர் அதிகாரிகளை அண்மையில் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

இப்பேச்சுகளின் போது வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை தளர்த்துவது தொடர்பாகவும் வடக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொளளப்படும் பட்சத்தில் பொதுமக்கள் எதிர்நோக்கவுள்ள இன்னல்கள் குறித்தும் பிதா ஜெயநேசன் இராணுவ அதிகாரிகளுக்கு விளக்கமளித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## றொக்கற் வெடித்த பின்பே வீசப்பட்டதை உணர்ந்தோம்

### முல்லையில் காயமடைந்தவர் தெரிவிப்பு

[நமது நிருபர்]

சன்னம் பட்டதும் அம்மா என அலறியவாறு கீழே சாய்ந்த என்னை ஏறிமிதித்துக் கொண்டு எல்லோரும் ஓலமிட்டவாறு சிதறி ஓடினார்கள் என கடந்த 18ஆம திகதி இரவு மத்தளன் கிராமத்தில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியின் போதுசிறிலங்காவின் புக்காரா விமானம் நடாத்திய றொக்கற் தாக்குதலில் சிக்கி படுகாயமடைந்த சகாயநாயகி என்ற இளம்பெண் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மத்தளன் கிராமத்தில் கடந்த 18ஆம் திகதி இரவு கலைநிகழ்ச்சி நடைபெற்ற போது அதில் கலந்துகொண்ட மக்கள் கூட்டத்தின்மீது சிறிலங்காவின் புக்காரா விமானம் றொக்கற் தாக்குதலை நடாத்தியதில் 13பொதுமக்கள் உடல் சிதறிப் பலியானதுடன் 41 பேர் காயமடைந்ததும் தெரிந்ததே.

இச்சம்பவத்தில் காயமடைந்த சகாயநாயகி மேற்படி சம்பவம்பற்றி மேலும் விபரிக்கையில் சம்பவ தினம் மாலை திறப்புவிழா நிகழ்வு இடம்

[4ஆம் பக்கம் பார்க்க]

# திலீபனின் உருவப்படங்கள் வீடுகளில் வைத்து அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தாயக விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்ததன் மூலம் தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் நிலைத்து விட்ட தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களினையொட்டி யாழ். குடாநாடெங்கும் அஞ்சலிநிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

யாழ் குடாநாட்டின் நகரப் பகுதிகள் மட்டுமன்றி கிராமப் பகுதிகள் போன்ற அனைத்து இடங்களிலும் இவ் அஞ்சலி நிகழ்வுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக குடா நாட்டில் உள்ள பொதுமக்களின் வீடுகள் தோறும் விசேடமாக அமைக்கப்பட்டிருக்கும் அலங்கரிக்கப்பட்ட நினைவுப் பந்தல்களில் தியாகி திலீபனின் உருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. படங்களின் முன்னால் அணையாதீபம் ஏற்றப்பட்டுள்ளது. அத்துடன் சில பந்தல்களில்

[3ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் தாக்குதலுக்கு அதிரடிப்படையினர் பலி

அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு காட்டுப்பகுதியில் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிய விசேட அதிரடிப் படையைச்சேர்ந்த ஒருவர் பலியானார், நால்வர் காயமடைந்தனர். இச்சம்பவம் கடந்த வார இறுதியில் நடைபெற்றது.

விசேட அதிரடிப்படை அணி ஒன்று காட்டுப்பகுதியூடாக சென்றபோது கண்ணிவெடியில் சிக்கியதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன இதேசமயம் உறுதிப்படுத்தப்படாத செய்திகளின்படி விசேட அதிரடிப்படையினர் கண்ணிவெடியில் சிக்கவில்லை எனவும் விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து தாக்கியதினாலேயே அவர்கள் இழப்பை சந்தித்தனர் எனவும் ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## 'குமண' கப்பல் மூலம் பயணம் செய்வோருக்கு

மேர்சிஸ் 'குமண' கப்பல் மூலம் பருத்தித்துறையிலிருந்து திருக்கோணமலை வரை செல்வதற்காக விண்ணப்பித்துள்ள அனைவரும் நாளை புதன் கிழமை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணம் பணிமனைக்கு மு.ப. 8.00 மணிக்கும் பகல் 12மணிக்கும் இடையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பயணத்திற்சுத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் அன்றைய தினம் தமது பயணச் சீட்டுக்களில் கையொப்பமிட்டு தமது பயணத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்படி தினத்தில் பணி

(4ஆம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவாக உண்ணாவிரதம், சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்டினன்ட்கேணல் திலீபன் நினைவாக வட்ட ரீதியாக நடைபெற்றுவரும் அடையாள உண்ணாவிரதங்கள் நாளை பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன:-

சங்கானை வட்டம், சங்கானை அரசடிவைரவர்கோவிலடி, சங்கானை சிற்றூர் மக்கள; கோப்பாய் வட்டம், நீர்வேலி வாய்க்காற் தரவைப் பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி திலீபன், காமாட்சி அம்பாள் ச.ச. நிலையங்கள்; சண்டிலிப்பாய் வட்டம் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவில் முன்றலில் பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை தெ.ப. பொ. உ.கூ.வி. சங்கங்கள்; உடுவில் / தெல்லிப்பழை வட்

[3ஆம் பக்கம் பார்க்க]


''ஒரு மாபெரும் சதி வலைக்குள் சிக்கி வரும் எம் மக்களை எப்படியாவது விடுவிக்கவேண்டும்''

- திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,

யாழ். மாவட்டம்,

(சி-7435)

## வரி விளம்பரம்

### ஆண்டு 4 வகுப்பு

ஆண்டு 4 (புலமைப் பரிசில் 1994) சனி ஞாயிறு வகுப்புக்கள் சனி மு. ப. 8-00—11-00 ஞாயிறு பி. ப. 2-00 — 5-00 நடைபெறும். வகுப்பு ஆரம்பம் 25-09-93 சனி தொடர்பு கொள்ளவும் புதிய சக்தி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5054)

### தேவை

ஆங்கில வைத்திய நிலையத்திற்கு பெண் தாதிமாரும், பெண் உதவியாளரும் தேவை. வேலை பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். மே/பா 200, C/O ஈழநாதம். (6062)

### திருட்டு

(குருநகர்)

பட்டப்பகலில் வீடு நுழைந்து தையல் இயந்திர உதிரிப் பாகங்களை திருடிச் சென்ற சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் குருநகர் மவுண்கார் மேல்வீதி, செபமாலை கலிஸ்ரம்மா என்பவரது வீட்டில் நடைபெற்றுள்ளது. [21]

# மோட்டார் ஊர்தி பதிவு ஆறாம் கட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் ஊர்திப் பதிவுகளின் ஆறாம் கட்டப் பணிகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளன. வடமராட்சி பகுதியின் கீழ்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளான கரவெட்டி, வடமராட்சி கிழக்கு பிரிவுகளையும், தென்மராட்சிப் பகுதியின் கீழ்வரும் தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பளைப் பகுதிகளில் வாழும் மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் தமது மோட்டார் ஊர்திகளை கொடிகாமத்தில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப் பதிவு செயலகத்தில் இழமை நாட்களில் பதிவுக்கு உட்படுத்துமாறு மோட்டார் ஊர்திப் பகுதிச் செயலகம் பொது மக்களைக் கோரியுள்ளது. இவ் அலுவலகம் கிழமைநாட்களில் காலை 8 30 பணிமுதல் பிற்பகல் 3 30 மணி வரை செயற்படுமெனவும் சனிக்கிழமைகளில் காலை 8 30 மணி முதல் பிற்பகல் 1 00 மணி வரை செயற்படுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் வடமராட்சிப் பகுதியினை சேர்ந்த மோட்டார் ஊர்திகள் வடமராட்சியில் அமைந்துள்ள அரசாங்க அனுமதி வழங்கும் செயலகங்களான மாலிசந்தி, உடுப்பிட்டியிலும் தென்மராட்சி, பளைப் பகுதியின் மோட்டார் ஊர்திகள் சாவகச்சேரி அரசாங்க அனுமதி வழங்கும் செயலகத்திலும் வைத்து பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் வாகனங்களின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் திகதி நேரம் என்பன பற்றி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிகிறது.

## குளத்தில் குளித்துக் கொண்டிருந்த இராணுவம் மீது தாக்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் குளத்தில் குளித்துக் கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடந்த 16ஆம் திகதி மாலை 5 00 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் அம்பிளாந்துறை பகுதியில் உள்ள அம்பலத்தடி சிறிலங்கா இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் தமது முகாமிற்கு அண்மையிலுள்ள கடுக்காமுனை வில்லுக் குளத்தில் குளித்துக் கொண்டிருந்த போதே இவர்கள் மீது விடுதலைப் புலிகள் இக் கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் நடாத்திய இக் கண்ணிவெடித் தாக்குதலால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை.

### நெல் விதைப்பு ஆரம்பம்

வலிகாமம் மேற்குப் பகுதிகளில் பெரும்போக நெல் விதைப்பு ஆரம்பமாகி உள்ளது. அண்மையில் சிறிதுமழை பெய்ததின் காரணமாக விவசாயிகள் நெல் விதைப்பு வேலைகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர்.

மூளாய், பொன்னாலை, சுழிபுரம், சித்தன்கேணி, சங்கானை, அராலி, சங்கரத்தை ஆகிய இடங்களிலுள்ள நெற்காணிகளில் விவசாயிகள் நெல் விதைப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உயிருக்கு உத்தரவாதமில்லை மீளக் குடியேற முடியாது!

## மட்டு. அரச அதிபரிடம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

உயிருக்கு உரிய உத்தரவாதம் இல்லையேல் மீளக் குடியமர்வதற்கு தாங்கள் தயாராக இல்லையென வாழைச்சேனை அகதிமுகாமில் தங்கியுள்ள எல்லைக்கிராமத்து மக்கள் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் ஆர் மௌனகுருசாமியிடம் தெரிவித்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று அரசாங்க அதிபர் கொழும்பிலுள்ள புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள் 'செ ரடீ' நிறுவனத்தின் வெளிநாட்டுப் பிரதிநிதி ஆகியோருடன் வாழைச்சேனை அகதிமுகாமுக்கு சென்று அகதிகளுடன் உரையாடினார்.

மீளக்குடியமர்வதற்கு நாங்கள் எல்லோரும் தயாராகவுள்ளோம். ஆனால் எல்லைக் கிராமங்களில் சென்று மீண்டும் வாழ்வதற்கு எங்களுக்கு பாதுகாப்பு இல்லையாது. அப்பகுதியின் பாதுகாப்பை உறுதி செய்தபின்னரே நாங்கள் இருப்பிடம் செல்ல முடியும் என அகதிகள் கேட்டுக் கொண்டனர். புனானை, வடமுனை, ஊத்துச்சேனை போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து வாழைச்சேனை அகதி முகாமில் வசித்து வருகின்றனர். இக்கிராமங்களுக்கு அண்மையாக பல சிங்கள குடியேற்றங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரச அதிபர் அகதிகளுடன் உரையாடிக் கொண்டிருந்த போது அங்கு நின்ற யுவதி ஒருவர் கண்ணீருடன் இவ்வாறு கூறினார்.

"ஐயா. நாங்கள் அனுபவித்த துன்பங்கள் போதும். கலவரத்தினால் சொந்த பந்தங்களை இழந்து நிற்கிறோம். இனியும் எம்மால் அங்கு சென்றுவாழ முடியாது எனது கணவரையும் பிள்ளைகளையும் உறவினரையும் இழந்த கொடூரமான காட்சியை நேரில் கண்டவள் நான். இனியும் அப்படியொரு மரண வேதனையை அனுபவிக்க முடியாது நிலைமை சீராகும்வரை நாங்கள் இங்கேயே வாழ உதவுங்கள்" என கேட்டுக் கொண்

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



### வீரவேங்கை குயிலன்

[ஜெயராசா-ஜெயரேபன் (ரேபன்)]

குரும்பசிட்டி தெல்லிப்பழை

| பலர்வு | வீரச்சாவு |
| --- | --- |
| 26.11.1975 | 01.10.1992 |

இதி: 21-9-1993

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை எம்துயரம்
காண்பதெப்போ? காண்பதெப்போ?
கண்ணில் நீர் ஓயவில்லை
மாண்டு விட்ட மாவீரா!
தமிழ்க் குலத்தின் புதல்வா
மீண்டும் இங்கு பிறந்து நீவா
மேன்மையுடன் தமிழீழம்
தோன்றுகையில் குயிலா நீ
தோழருடன் கூட நிற்பாய்.

# பெரும்போக செய்கைக்கு 5,000மெ. தொன் உரம் தேவை

(நமது நிருபர்)

யாழ் குடாநாட்டில் பெரும்போகச் செய்கைக்கு (எதிர்வரும் ஜனவரிமாதம் வரை) சுமார் 5000 மெற்றிக் தொன் உரம் தேவைப்படுவதாக யாழ் செயலக வட்டாரங்களில் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

இதன்படி ஏற்கனவே இங்கு கொண்டுவரப்பட்ட சுமார் 3000 மெற்றிக் தொன் உரம் கையிருப்பில் இருப்பதாகவும் மிகுதி தேவைப்படும் உரம் கப்பல் மூலமும் மற்றும் வேறு வழிகளிலும் இங்கு எடுத்துவரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான அனுமதி சகல துறையினருக்கும் வழங்கப்பட்டுள்ளதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் பயிர்ச் செய்கைக்குத் தேவையான மருந்து வகைகளும் ஓரளவு கையிருப்பில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இன்னும் இரண்டொரு தினங்களில் தருணு கப்பலில் ஒரு தொகுதி உரம் இங்கு எடுத்துவரப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (வா)

## பொறியியல் சேவையில் பெரு வீழ்ச்சி ஏற்படும்.

(கொழும்பு)

பொறியியல் சேவையில் நிலவும் விரக்தி மனோபாவம் நீக்கப்படாவிட்டால் இலங்கையில் பொறியியல் சேவை வீழ்ச்சி காணும் என்று மூத்த பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பொறியியலாளர்கள் அனைவருமே அதிருப்தியுற்றுள்ளனர். பல அனுபவசாலிகள் நாட்டைவிட்டு சென்றுள்ளனர். வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமை கட்டுப் படுத்தப்படாவிட்டால் பொறியியல் வேலைகள் சீர்குலையும் என்று நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திரு ஏ. டி எஸ் குணவர்த்தனா தெரிவித்தார்.


## தவறிவிட்டது

குங்குமக் கலர் பாக் ஒன்று மிகவும் தேவையான முக்கிய ஆவணங்களுடன் கனகம்புளியடிச் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதக் காரியாலயத்திலோ அல்லது போராளிகள் நலன்காக்கும் அலுவலகத்திலோ ஒப்படைக்கவும்.

(6058)

வடமாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 201, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

### சமாச விசேட பொதுக்கூட்டம்

சமாச விசேட பொதுக் கூட்டம் 27-9-93 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சமாச காரியாலயத்தில் நடைபெறும். அங்கத்துவ சங்கங்களை தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். தனித்தனி கூட்ட நிகழ்ச்சிநிரல்களும் அழைப்பிதழும் அனுப்பப்பட்டுள்ளன.

தலைவர்
வ. மா. க. தொ. கூ. ச
சமாசம்.

(6061)




தியாக தீபத்தின் ஆறாம் ஆண்டு நினைவு

நினைவு கூருகின்றோம்

சிந்தனைக்கு

உன் சொல்லுக்கேற்ப செயலையும்,
செயலுக்குஏற்ப சொல்லையும் அமைத்துக்கொள்.
– வில்லியம் ஷேக்ஸ்பியர்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-09-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


## யார் பயங்கரவாதிகள்?

சிறிலங்கா அரசு மீண்டும் ஒருதடவை தனது காட்டுமிராண்டித்தனத்தை வெளிப்படுத்தியுள்ளது. முல்லைத்தீவில் கலைநிகழ்ச்சி ஒன்றைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த அப்பாவிப் பொது மக்கள் மீது கண்மூடித்தனமாக மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் 13 பேர் பலியாகியுள்ளனர். 40க்கும் மேற்பட்ட அப்பாவிகள் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் சிறுவர்கள், முதியவர்கள் உட்படப் பெண்களும் அடங்குவர்.

இது அரச பயங்கரவாதிகளின் திட்டமிட்ட இனப்படுகொலை ஆகும். பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் தமிழரைக் கொன்றொழிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

நிலைமை இவ்வாறு இருக்க, சிறிலங்காவின் ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்கா தமிழ்மக்கள் தமது சுதந்திரத்திற்கும், பாதுகாப்பிற்கும் என நடத்திவரும் போராட்டத்தை 'பயங்கரவாதம்' எனக் கூறுகின்றார். தமிழ்மக்களுக்கு இலங்கைத் தீவில் பிரச்சினை எதுவும் இல்லை என்றார்.

ஆனால், யார் 'பயங்கரவாதிகள?' 'பயங்கரவாதத்தை' ஆரம்பித்து வைத்தது யார்? இலங்கையில் இனவன்முறை ஒன்று உருவாவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்? சிங்களப் பேரினவாதிகளால் இதற்குப் பதில் கூற முடியுமா?

"இலங்கை சுதந்திரம்" அடைந்த வேளையில், தமிழ் மக்களும் ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டை ஏற்றே இருந்தார்கள். அதன் பின்னர், தமிழர்கள் தமது உரிமைகள் மறுக்கப்பட்ட போதும் ஆயுதம் தாங்கிய போராட்டவில்லை; தமது உரிமைகளைச் சாத்வீகமான முறையிலேயே கேட்டார்கள். அத்தோடு, காலத்திற்குக் காலம் தமது கோரிக்கைகளை விட்டுக் கொடுத்தும் இருந்தனர்.

ஆனால், சிங்களப் பேரினவாத சக்திகள் தான் அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக, சிங்கள மொழிச் சட்டம் என்றும், குடியேற்றங்கள் எனவும் பிரச்சினையைக் கூர்மையடையச் செய்தன. இதேவேளை தமிழர்கள் தமது போராட்டங்களைச் சாத்வீகமானமுறையில் நடத்த முற்பட்டபோது அதற்கு வன்முறை மூலம் பதிலளித்தன. அதாவது, அரச பயங்கர

## அந்த நாள் நினைவுகள்

பல்லவி

வந்தபடை வாழ்வளிக்கும் என்று நம்பினோமே
வாசலிலே... பூச்சொரியும் என்று துள்ளினோமே
இந்தியர்கள் ஈழமண்ணை வென்று தருவார்கள்
இன்னலினிச் சென்று விடும் என்று தொழுதோமே.

சரணம்

வென்றுதர வந்தவர்கள் கொன்று தள்ளினார்கள்
வீதியெங்கும் நின்றுகொண்டு இங்கு துள்ளினார்கள்
அன்றெமது திலீபனுக்குப் பாடை சமைத்தார்கள்
அழுதவிழி காயமுன்னர் போரைத் தொடுத்தார்கள்.

காலெடுத்துத் தீயினிலே... தம்பி நடந்தானே!
கண்ணெதிரே எங்களது பிள்ளை கிடந்தானே
போரெடுத்து நின்றபுலி பேச்சிழந்தது
புன்முறுவல் பூத்தபடி மூச்சிழந்தது.

பாரதத்துத் தூதுவனைப் பார்த்திருந்தோமே
பன்னிரண்டு நாள்வரையும் காத்திருந்தோமே
தேரெடுத்துப் பாவியர்கள் இங்குவரவில்லை
தேம்பிநின்ற எங்களுக்கு வாழ்வளிக்கவில்லை.

– புதுவை இரத்தினதுரை

## ரவைகளுடன் வந்த சுவிஸ் பிரஜை

(கொழும்பு)
துப்பாக்கி ரவைகளுடன் கட்டுநாயக்கா வந்து சேர்ந்த சுவிஸ் பிரஜை ஒருவர் கொழும்பு பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டார்.

சுவிஸ் நகரான சூரிச்சிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலைதீவு செல்லும் வழியில் மேற்படி நபர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தங்கிநின்ற போது இவர் மீது சந்தேகம் கொண்ட சி.ஐ.டி. பொலிசார் இவரைச் சோதனை செய்தனர் இதன் போதே இவர் மறைத்து வைத்திருந்த 556 துப்பாக்கி ரவைகளைக் கைப்பற்றினர்.

மாலைதீவு செல்லும் சுவிஸ் பிரஜை என்பதால் இவர்மீது நடவடிக்கை எதுவும் எடுக்காது துப்பாக்கி ரவைகளை மாத்திரம் பறிமுதல் செய்துகொண்டு அடுத்த விமானத்தில் மாலைதீவு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

## காதலியை சந்திக்கச் சென்ற பொலீஸார் மீது சூடு

(கொழும்பு)
காதலியை நள்ளிரவுவேளையில் கள்ளத்தனமாகச் சந்திக்கச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொரளையில் வசிக்கும் ஆளும் கட்சி எம். பி. ஒருவரின் வீட்டுவாயிலிலேயே மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

நிலையத்தில் பணியாற்றி வருபவரென்றும் முன்னர் இவர் பொரளை பொலிஸில் பணியாற்றிய காலத்தில் பிரஸ்தாப எம். பி யின் இல்லத்தில் 4 வருடங்களாகப் பாதுகாப்பு கடமையில் இருந்தவர் எனவும் அப்போது எம். பி யின் மகளுக்கும் இவருக்கும் இடையில் காதல் ஏற்பட்டதெனவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை வீட்டில் கள்ளக்கோல் நடத்தும் நேசத்

# ஆசியாவில் 6 கோடி பெண்கள் காணாமற் போகின்றனர்

நியூயோர்க் அரசாங்கமும் ஸ்தாபனங்கள் ஆண்டுதோறும் குடிசன மதிப்புப் புள்ளிவிபரங்களையும் ஒழுக்கக் குறிப்புக்களையும் தொகுதி தொகுதியாக தயாரித்து வெளியிடுகின்றன. ஆனால் மக்கள் தொகையில் "காணாமற் போகும் பெண்கள்" பற்றிய தகவல்கள் ஒரு சுனக்குறைவாகவே ஒலிக்கின்றன.

ஹாவார்ட் பல்கலைக்கழக பொருளியல்துறை பேராசிரியர் அமர்தியா சென் கூறுவதன்படி மக்களின் வாழ்வு-சாவு ஆகியன பற்றிய புள்ளிவிபரங்கள் ஒரு நாட்டின் வருமானத்தைச் சுட்டிக்காட்டுவதிலும் பார்க்க கூடுதலாக அந்த நாட்டைப்பற்றி தெரிவிக்கின்றன. ஆசியாவில் ஆறு கோடிக்கு மேலான பெண்கள் காணாமல் போயிருக்கலாம்.

ஒரே மாதிரியான பராமரிப்பு வழங்கப்படுகின்ற போதிலும் பெண்கள் ஆண்களிலும் பார்க்க கூடுதலானவர்கள் என மருத்துவ சான்றுகள் கூறுகின்றன. வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பெண்கள் ஆண்களிலும் பார்க்க 5 சதவீதம் கூடுதலாக இருக்கின்றனர். இதற்கு மாறாக இந்தியாவில் 1992 ஆம் வருட கணக்கெடுப்பின்படி 100 ஆண்களுக்கு 93 பெண்களே இருந்தனர்.

ஐக்கிய நாடுகளின் 1992 ஆம் வருட "உலக மகளிர்" என்ற அறிக்கையில் ஆப்கானிஸ்தானில் 100 ஆண்களுக்கு 94.5 பெண்கள் என்றும், பங்களாதேஷில் 94.1 பெண்கள் என்றும், பூட்டானில் 93.8 பெண்கள் என்றும், நேபாளத்தில் 94.8 பெண்கள் என்றும், பாகிஸ்தானில் 92.1 பெண்கள் என்றும், பப்புவா நியூகினியில் 92.8 பெண்கள் என்றும், பெண்கள் குறைவாக உள்ள நாடுகளின் புள்ளிவிபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சீனாவிலும் இந்தியாவிலும் ஆண், பெண் விகிதங்களை ஆபிரிக்க ஹராரவுடன் ஒப்பிட்டால் சீனாவில் 4 கோடி 40 இலட்சம் பெண்களும் இந்தியாவில் 3 கோடி 70 இலட்சம் பெண்களும் காணாமல் போயுள்ளதாக தெரியவரும் என்று சென் கூறுகின்றார்.

காணாமல் போகும் பெண்களின் தொகை இறப்புத் தொகையில் உயர்ந்த வரலாற்

அந்த நாடுகளில் கூட சாவையும், வாழ்வையும் பொறுத்த வரையிலான பொருளாதார பெறுபேற்றின் மதிப்பீடு பஞ்சம் சுகாதாரம் பராமரிப்பு பாலியல் சமனின்மை மற்றும் வறுமை, இன ஏற்றத்தாழ்வு ஆகியன தொடர்பான பூரண புரிந்துணர்வைக் கொடுக்கும் என்றும் சென் கூறுகின்றார்.

செல்வந்தநாடு ஒன்றின் தலைக்கு மிக உயர்ந்த மொத்த தேசிய வருமானத்துடன் வாழ்ந்து வரும் பிரஜைகள் வறிய நாடுகளில் வசிப்பவர்களிலும் பார்க்க குறைந்த வாழ்நாளையே கொண்டிருக்க முடியுமென்றும் இந்த நிபுணர் கூறுகிறார்.

உதாரணமாக ஆபிரிக்க-அமெரிக்கர்கள் கூடுதல் வருமானத்தைக் கொண்டுள்ள போதிலும் குறைந்த வருமானத்தைப் பெறும் சீனர்கள் அல்லது இந்தியாவின் கேரளர்களிலும் பார்க்க, குறைந்த வாழ்நாளையே கொண்டுள்ளார்கள் ஆபிரிக்க அமெரிக்கர்கள் மத்தியில் ஏற்படும் இழப்பின் அளவும் அதன் தன்மையும் வருமானத்தைக்கொண்டு அளவிட முடியாதவை என்று சென் கூறுகிறார்.

இரண்டு கோடி 90 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டுள்ள கேரள மாநிலத்தின் அனுபவத்தின் அனுபவம் வளர்முக நாடுகளில் வறுமையால் இறப்பு விகிதம் அதிகரிக்கின்றது என்ற கோட்பாட்டை பொய்ப்பித்து விடுகின்றது.

கேரளர்களின் மொத்த தேசிய வருமானம் நாட்டின் சராசரி வருமானத்திலும் பார்க்க குறைவாக இருக்கின்ற போதிலும் அவர்கள் 70 வயதிற்கு குறையாத வாழ்நாளைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சவுதி அரேபியா, பிறேசில், தென் ஆபிரிக்கா போன்ற செல்வந்த நாடுகளில் வசிப்பவர்களிலும் பார்க்க கேரளர் கூடிய வாழ்நாளைக் கொண்டுள்ளனர் என்று இது காண்பிக்கின்றது.

குறைந்த வருமானம், வறுமை ஆகியவற்றினால் இடைக்கும் இந்த பெறுபேற்றின் பயனாக பொதுக்கல்வி சமூக தொற்று நோய்கள், பராமரிப்பு தனிப்பட்ட மருத்துவ சேவைகள் மானிய அடிப்படையிலான ஊட்டச்சத்து விநியோகம் ஆகியன விஸ்தரிக்கப்படுகின்றன என்று சென் தெரிவிக்கின்றார்.

ஆனால் சனத்தொகையின் கணிசமான விகிதத்தினர் உணவு பெற்றுக்கொள்ளும் வழிவகைகளை இழக்கும் போது பஞ்சம் தலை தூக்குகிறது என்ற உண்மையையும் சென் வெளியிட்டுள்ளார்.

## சுண்ணாகத்தில் திலீபன் நினைவுநாள்

தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவை முன்னிட்டு இன்று யாழ் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கு நினைவு உரைகளும் அதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப் பணிப்பாளர் திரு. சி.வேலாயுதம் அவர்களும் சிறப்பு விருந்தினராக மகளிர் படையணி தலைவி செல்வி விதுஷா அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். அதை தொடர்ந்து தூங்காதே தம்பி தூங்காதே என்ற தலைப்பில் கவியரங்கும், தமிழீழத்தை ஆக்கிரமிப்பது இலங்கையா? இந்தியாவா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம் பெறும்.

## திலீபன்

வைக்கப்பட்டிருக்கும் தியாகி திலீபனின் உருவப்படத்துக்கு தினசரி மலர்கள் தூவியும் மலர்மாலைகள் அணிவித்தும் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், சிறுவர்கள் என்ற வயது வேறுபாடு இன்றி அனைத்தும் வரும்

## 3 அதிரடிப்படையினர் நிலை கவலைக்கிடம்

(மட்டக்களப்பு)

காரணமாக இருந்தவர்கள் யார்? சிங்களப் பேரினவாதிகளால் இதற்குப் பதில் கூற முடியுமா?

"இலங்கை சுதந்திரம்" அடைந்த வேளையில், தமிழ் மக்களும் ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டை ஏற்றே இருந்தார்கள். அதன் பின்னர், தமிழர்கள் தமது உரிமைகள் மறுக்கப்பட்ட போதும் ஆயுதம் தாங்கிய போராட்டவில்லை; தமது உரிமைகளைச் சாத்வீகமான முறையிலேயே கேட்டார்கள். அத்தோடு, காலத்திற்குக் காலம் தமது கோரிக்கைகளை விட்டுக் கொடுத்தும் இருந்தனர்.

ஆனால், சிங்களப் பேரினவாத சக்திகள் தான் அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக, சிங்கள மொழிச் சட்டம் என்றும், குடியேற்றங்கள் எனவும் பிரச்சினையைக் கூர்மையடையச் செய்தன. இதேவேளை தமிழர்கள் தமது போராட்டங்களைச் சாத்வீகமானமுறையில் நடத்த முற்பட்டபோது அதற்கு வன்முறை மூலம் பதிலளித்தன. அதாவது, அரச பயங்கரவாதத்தைத் தமிழர் மீது கட்டவிழ்த்து விட்டன.

1956இல் சிங்கள மொழிச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதற்கு சாத்வீகமான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்ட தமிழர்களை குண்டர்களையும், ஆயுதப் படையையும் ஏவி வன்முறையைத் தொடங்கி வைத்தவர்களே சிங்கள ஆட்சியாளர்கள்தான்.

அதன்பின்னர், காலத்திற்குக் காலம் திட்டமிட்டு தமிழ்மக்கள் மீது கலவரத்தைக்கட்டவிழ்த்து விட்டவர்களும் அரச பயங்கரவாதிகளே. 1958, 1977, 1983 என அரச பயங்கரவாதிகள் தமிழர் மீது தாக்குதல்நடத்தியதும், 1983-ன் பின் தொடர்ச்சியாக இன்று வரையும் தமிழர் மீது தாக்குதல் நடத்தி வருபவர்களும் அரச பயங்கரவாதிகளே.

மேலும் இவ் இன அழிப்பு நடவடிக்கைக்குத் தனியாக தற்பொழுது ஆட்சியிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சி மட்டும் பொறுப்பல்ல சிறிலங்காவில் 1948க்குப் பின் ஆட்சியில் இருந்த சகல கட்சிகளுமே பொறுப்பாகும். ஆனால் நீண்டகாலம் ஆட்சியில் இருந்ததாகப் பெருமை பேசிக் கொள்ளும் ஐ. தே. கட்சியே இதற்குப் பெரும் பொறுப்பு ஏற்க வேண்டும். இதில் டி. எஸ். சேனநாயக்காவில் இருந்து டிங்கிரி பண்டா வரையிலும் எவரும் விதிவிலக்கல்ல.

இதேவேளை தமிழர் தமது உரிமைகளைப் பாதுகாக்க ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கியதோ, எழுபதுகளின் பிற்பகுதியில் ஆகும். அதேவேளை ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்றதோ எண்பதுகளின் முற்பகுதியில். அதாவது, அரச பயங்கரவாதத்தின் வரலாறு சுமார் 45 வருடங்களுக்கு மேலாகக் காணப்பட, தமிழரின் ஆயுதப் போராட்டமானது சுமார் 15 வருட வரலாற்றையே கொண்டுள்ளது. அதுவும் அரச பயங்கரவாதத்தில் இருந்து தமது இனத்தைக் காத்துக் கொள்வதற்காகவே ஆயுதப் போராட்டம் தொடங்கப்பட்டது.

இந்நிலையில் யார் பயங்கரவாதிகள்? பேரினவாத சிந்தனையோடு ஒரு சிறுபான்மை இனத்தை அழித்து விட திட்டமிட்டுச் செயற்படும் சிங்கள அரசாங்கங்களா? அன்றி தமது இனத்தின் பாதுகாப்பிற்காக ஆயுதம் தாங்கிப் போராடுபவர்களா? சிங்களப் பேரினவாதத்திற்குத் தலைமைதாங்க முற்படும் டி. பி. விஜயதுங்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியா? அல்லது தமிழரின் உரிமைகளைப் பாதுகாக்க முற்பட்டுள்ள விடுதலைப் புலிகளா?

---

நாயகா விமான நிலையத்தில் தங்கியிருந்த போது இவர் மீது ... தில் மாலைதீவு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

## காதலியை சந்திக்கச் சென்ற பொலீஸார் மீது சூடு

(கொழும்பு)

காதலியை நள்ளிரவுவேளையில் கள்ளத்தனமாகச் சந்திக்கச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொரளையில் வசிக்கும் ஆளும் கட்சி எம். பி. ஒருவரின் வீட்டுவாசலிலேயே மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

இச்சம்பவம் பற்றிய விசாரணையின் போது மேற்படி கான்ஸ்டபிள் தற்போது மஹியங்கனை, புத்தளம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வருபவரென்றும் முன்னர் இவர் பொரளை பொலிஸில் பணியாற்றிய காலத்தில் பிரஸ்தாப எம். பி யின் இல்லத்தில் 4 வருடங்களாகப் பாதுகாப்புக் கடமையில் இருந்தவர் எனவும் அப்போது எம். பி யின் மகளுக்கும் இவருக்கும் இடையில் காதல் ஏற்பட்டதெனவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை வீட்டில் கன்னக்கோல் நடத்தும் நோக்குடன் யாரோ வந்திருப்பதாக நினைத்தே இவர் சுடப்பட்டதாகப் பொலிஸில் தெரிவிக்கப்பட்டது.

---

ராஜீவ் கொலைவழக்கில்

## தடுத்து வைக்கப்பட்டோர் உண்ணாவிரத போராட்டம்

[சென்னை]

ராஜீவ்காந்தி கொலை வழக்கின்கீழ் குற்றம் சாட்டப்பட்டு தமிழகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் பதினாலு பேர் உண்ணாவிரதம் இருப்பதாகவும் இவர்களில் ஐந்துபேர் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இரும்பொறை, பாக்கியநாதன் என்னும் இரு இந்தியத் தமிழர்களும், முருகன், சங்கர், சுசீந்திரன் என்னும் இலங்கைத் தமிழர்களுமே இவ்விதம் உண்ணாவிரதம் இருப்பதாக கூறப்படுகிறது.

## வொய்ஸ்ஒவ் அமெரிக்கா எதிராக ஆர்ப்பாட்டம்

[மணிலா]

சிலாபத்தில் இரணவில எனும் இடத்தில் அமெரிக்க அரசின் வானொலியான "வொய்ஸ் ஒப் அமெரிக்கா" வானொலி நிறுவ இருக்கின்ற ஒலி ஊக்குவிப்புத் தளத்திற்கு கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் அக்கிராமத்தில் 15 000திற்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றுதிரண்டு அமைதிப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

இம் மக்களில் பெரும்பான்மை மக்கள் கத்தோலிக்கர்கள் என்பதால் சிலாப ஆயர் மார்க்கஸ் பெர்னாண்டோ சமயசார்புள்ள பேரணிக்கு தலைமைதாங்கினார். தற்போதைய நானூறு ஏக்கர் திட்டமும் அமெரிக்கா இராணுவ தளத்தைதமது கிராமத்தில் நிறுவ திட்டமிட்டுள்ளதாக இம்மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## பாபர்மசூதி இடிப்பு; 60 பேர் விபரம் வெளியீடு

(டில்லி)

இந்தியாவில் அயோத்தியில் இருந்த பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு உடந்தையாக இருந்ததாக சுமார் அறுபது பேரின் பெயர்ப் பட்டியலை இந்திய துப்பறியும் பொலிஸ் பிரிவான சி. பி. ஐ. வெளியிட்டுள்ளது.

இந்த அறுபதுபேரில்பாரதீய ஜனதாக் கட்சியின் உயர் தலைவர்கள் கே. அத்வானி, சிவசேனை, இயக்கத் தலைவர் பால் தாக்கரே விஸ்வ இந்து பரிசத் அமைப்பின் தலைவர் அசோக் சிங்கல் ஆகியோர் அடங்குகின்றனர்.

குற்றம் சாட்டப்பட்ட இந்த அறுபது பேர் மீதும் இந்திய அரசு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

---

களாதேஷில் 94.1 பெண்கள் என்றும், பூட்டானில் 93.3 பெண்கள் என்றும், நேபாளத்தில் 94.8 பெண்கள் என்றும், பாகிஸ்தானில் 92.1 பெண்கள் என்றும், பப்புவா நியூகினியில் 92.8 பெண்கள் என்றும், பெண்கள் குறைவாக உள்ள நாடுகளின் புள்ளிவிபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சீனாவிலும் இந்தியாவிலும் ஆண், பெண் விகிதங்களை ஆபிரிக்க ஹராராவுடன் ஒப்பிட்டால் சீனாவில் 4கோடி 40 இலட்சம் பெண்களும் இந்தியாவில் 3 கோடி 70 இலட்சம் பெண்களும் காணாமல் போயுள்ளதாக தெரியவரும் என்று சென் கூறுகின்றார்.

காணாமல் போகும் பெண்களின் தொகை இறப்புத் தொகையில் உயர்ந்த வரலாற்றையும் ஆரோக்கியம் பேணலின் பெண்- விரோதத்தன்மையையும் பிரதிபலிக்கிறது என்றும் சென் குறிப்பிடுகின்றார்.

அமெரிக்கா போன்ற செல்

---

### திலீபன் நினைவாக

டம், கண்ணகையம்மன் கோவில் முன்றல் ம. தொ. க. ச. தெ. ம. வோ. ட. வி. க. சங்கம்; யாழ்ப்பாணம் வடக்கு, நல்லூர் கந்தசாமி கோவில் வீதி, வண்ணை மேற்றூர் மக்கள்; நல்லூர் வட்டம், நல்லூர் கந்தசாமி கோவில்வீதி, கொக்குவில் மக்கள்; கரவெட்டி வட்டம், நெல்லியடி சாமியன் அரசடி, கரவெட்டி கிழக்கு, மத்தி மேற்றூர் மக்கள்; உடுப்பிட்டி வட்டம், உடுப்பிட்டி மத்தி வைரவர் கோவிலடி, தொண்டமானாறு தெற்கு மக்கள்; பருத்தித்துறை வட்டம், அல்வாய் முத்துமாரியம்மன்கோவிலடி, புலோலி கிழக்கு, தும்பளை மக்கள்; பளை வட்டம், பளை பிரதேச சபை முன், தம்பகாமம் மேற்றூர் மக்கள், பளை றோ. க. த. க. பாடசாலை; கொடிகாமம் வட்டம், மிருசுவில் சந்தி அருகாமை, அரம்பகம் சந்தி, சமுத்திரன் ச. ச. நிலையம், உடுவெளி, மந்துவில் மாவீரர் ஸ்ரீ காந்தன் சூரியகுமாரன் ச. ச. நி. எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேசா வீதி, குடமியன் அ. த. க. பாடசாலை; சாவகச்சேரி வட்டம், மணம்குணாய் பிள்ளையார் கோவில் முன்றல், நுணாவில் கிழக்கு, மட்டுவில் வடக்கு, நுணாவில் மண்டுவில், மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை, மகளிர் பாடசாலை; கைதடி வட்டம், கைதடிச் சந்திக்கு அருகாமையில், கைதடி தெற்கு மேற்றூர், கைதடி மேற்கு கல்-சகம், கைதடி நாவற்குழி, அரச தமிழ்க் கலவன் பாடசாலை; தீவகக் கோட்டம், நல்லூர் கந்தசாமி கோவில் முன்றல், மயூரன் குடியிருப்பு, வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், புங்குடுதீவு அ. மிசன்.

---

## திலீபன் நினைவுநாள்

தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவை முன்னிட்டு இன்று யாழ் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கு நினைவு உரைகளும் அதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப் பணிப்பாளர் திரு. சி.வேலாயுதம் அவர்களும் சிறப்பு விருந்தினராக மகளிர் படையணி தளபதி செல்வி விதுஷா அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். அதைத் தொடர்ந்து தூங்காதேதம்பி தூங்காதே என்ற தலைப்பில் கவியரங்கும், தமிழீழத்தை ஆக்கிரமிப்பது இலங்கையா? இந்தியாவா? என்ற தலைப்பில் பட்டிமன்றும் இடம் பெறும்.

### திலீபன்

வைக்கப்பட்டிருக்கும் தியாகி திலீபனின் உருவப்படங்களுக்கு தினசரி மலர்கள் தூவியும் மாலைகள் அணிவித்தும் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், சிறுவர்கள் என்ற வயது வேறுபாடு இன்றி அனைத்துத் தரப்பினரும் இவ்வாறான அஞ்சலி நிகழ்வுகளில் கலந்து கொள்வதை அவதானிக்க முடிகிறது.

இவற்றை விட அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும், சிரமதான நிகழ்வுகளும் கோட்ட ரீதியாகவும், வட்டப் பிரிவு ரீதியாகவும் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்று வருகின்றன. மேலும் குடாநாட்டின் பல பகுதிகளில் தொடர் உண்ணாவிரத நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடற்புலிகளின் வலிகாமம் கிழக்கு வட்டத்திற்குட்பட்ட பிரதேசமான நாவாந்துறை, கொட்டடி விக்னூன்றி பிள்ளையார் கோவில் முன்றலில் திலீபனின் நினைவாக அடையாள உண்ணாவிரதம் நேற்று காலை 8 05 மணியளவில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கடற்புலிகளின் நாவாந்துறை பிரதேசப் பொறுப்பாளர் செல்வன் மதிவாணன் தலைமையில் இவ் அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றது.

## 3 அதிரடிப்படையினர் நிலை கவலைக்கிடம்

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா அதிரடி பொலிஸ் அணியினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிக்கிய அதிரடிப்படையினர் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

### உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளும் பாடசாலைகள்

வேலணை கிழக்கு ம.வித்தி, சருவில் றோ. த. க. பாடசாலை, வேலணை ஆத்திசூடி வித்தி, வேலணை தெற்கு ஐயனார், புங்குடுதீவு கிழக்கு அ.த.க. பாடசாலை, கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலை, மட்டுவில் தெற்கு அ. மி. த. க. பாடசாலை, மகளிர் ம. வி, மீசாலை கமலாம்பிகை வித்தி, மெருடாவில் சரஸ்வதி வித்தி, எழுதுமட்டுவாள் சிறீ கணேசா வித்தி, குடமியன் அ. த. க. பாடசாலை, கோயிலாக்கண்டி அ. த. க பாடசாலை மந்துவில் அ.த.க போக்கட்டி றோ. க. த. க. பாடசாலை அல்லிப்பளை இ. இ. த. க. பாடசாலை, பளை றோ க.த.க.பா., சித்தி விநாயகர் வித்தி, வல்வெட்டித்துறை விநாயகர் தன்னாலை காசிநாதன் வித்தி, நெல்லியடி ம. ம. வித்தி மெதடிஸ்ட் பெண்கள் உயர் அ.மி. த. க. பாடசாலை. யாழ் மத்திய கல்லூரி, சம்பத்திரிசியார் கல்லூரி, அரியாலை கிழக்கு அ. த. க. பாடசாலை, கல்வியங்காடு இ. த. க. பா, கல்வியங்காடு ஞானஉதயா வித்தி, பெரியகடை பாரதி பாசா வித்தி, திருநெல்வேலி றோ. க. பா, கோண்டாவில் சி. த, க. பா, சங்கானை சிவப்பிரகாச வித்தி, சுழிபுரம்கிழ. அ.மி. த க பாடசாலை, வள்ளியம்மை வித்தியாலயம், சிறுவிளான் கனகசபை வித்தியாலயம், குரும்பசிட்டி பொன்பரமானந்த, சென்கலட்டி ஞானோதய, மயிலிட்டி றோ. க. த. க, புகலட்டி சித்விஷ்ணு புத்தலட்டி பஞ்சீக. வரதராஜ கணேஸ்வரா, நவக்கிரி அ. மி. த, புத்தூர் மெ. மி. த. க, உரும்பராய் இந்துக்கல்லூரி, நவாலி அட்டகிரி.

### சிரமதானங்கள்

நாளை நடைபெறவிருக்கும் சிரமதானங்களின் விபரம் வருமாறு;

கோப்பாய் வட்டம் நீர்வேலி திலீபன் பாடசாலை துப்புரவு; உடுவில் தெல்லிப்பழை வட்டம் உடுவில் சிந்து முகாம் துப்புரவு; நல்லூர் வட்டம் கோண்டாவில் வகவா கிராமம் துப்புரவு; தீவகக் கோட்டம் மணியரசன் குடியிருப்பு பாதை அமைத்தல்.



கப்டன் மலரவன் எழுதிய

## போர் உலா

சிறப்பு வெளியீடு என்பன
இன்றுமுதல் பெறவேண்டிய முகவரிகள்

நாயகபாலன் ஸ்ரோர்ஸ்
மானிப்பாய்.

சற்குணம் புத்தகசாலை
மானிப்பாய்.

றெஜி புத்தகசாலை
ஆஸ்பத்திரி முன்பாக மானிப்பாய்.

செல்வரத்தினம் புத்தகசாலை
சங்கானை.

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

சிவசக்தி களஞ்சியம்
கைதடி சந்தி, கைதடி.

எ. எஸ். ரி. புத்தகசாலை

# தீவுப்பகுதிப் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு, அனலை தீவு, மாதகல் மற்றும் இலவாலை ஆகிய பகுதிகளுக்குச் செல்வதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் சென்ற சுமார் 40பேர் 'குமண' கப்பல் வரை இழுவைப் படகில் சென்று கப்பலில் ஏறி மேற்படி பகுதிகளுக்குச் செல்ல பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து ஏமாற்றத்துடன் தமது இடங்களுக்கு திரும்பினர்.

இவர்களுக்கான போக்குவரத்திற்கு பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தது. இதனைத் தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் இவர்கள் சென்றனர் எனவும் பின்னர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி மறுக்கப்பட்டமையை அடுத்து ஏமாற்றத்துடன் திரும்பியதாகவும், அங்கிருந்து திரும்பியோர் எமது நிருபருக்குத் தெரிவித்தனர்.

இவ்வாறு திரும்பியோரில் நெடுந்தீவைச் சேர்ந்த 23 பேரும் அனலைதீவைச் சேர்ந்த 6 பேரும் மற்றும் இலவாலை மாதகலைச் சேர்ந்த 11 பேரும் அடங்குகின்றனர்.

(நி) (பா)

---

குமண

மனைக்குச் சமுகமளிக்காதவர்கள் தமது விண்ணப்பத்தை வாபஸ் பெற்றவர்களாகக் கருதப்படுவர் எனவும் அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பில் வைத்திய சிகிச்சை மேற்கொள்ள யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவகுழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களும், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் குடும்ப மீள்சேர்தல் திட்டத்தின் கீழ் பயணம் செய்ய உறுதிப்படுத்தப்பட்டவர்களும், எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிறு காலை 8 30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்திற்கு பிரயாணத்திற்குத் தயாராக வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவர்கள் வைத்தியசாலை வளாகத்திற்குள்வர ஊழியர் நுழைவாயிலைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

---

நீண்டகால

படலாம் எனக் குறிப்பிட்டனர்.

வடக்கில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்க முன் சீனாவிலிருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்ய பேச்சுகள் நடைபெறுகின்றன. சுமார் 1000கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. வருட இறுதிக்குள் இங்கு வந்து சேர வேண்டிய ஆயுதங்களை இன்

# வீரவணக்க கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 9-ம்மாதங்களில் வீரச்சாவெய்திய மாவீரர்கள் மடு வட்டத்தில் எதிர்வரும் 30-ம் திகதி நினைவு கூரப்படவுள்ளதுடன் மாவீரர்களின் பெற்றோரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதன்போது கடந்த வருடம் செப்டம்பர் 25-ம் திகதி பூநகரிப்பள்ளிக்குடாப்பகுதியில் இடம்பெற்ற மினி முகாம்கள் மற்றும் காவலரண்கள் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய முன்னாள் மன்னார் மாவட்ட விசேட தளபதி லெப்டினன்ட் கேணல் சுபன் உட்பட ஆறு மாவீரர்களும் நினைவு கூரப்படவுள்ளமைகுறிப்பிடத்தக்கது அன்றையதினம் பிற்பகல் 2 மணிக்கு விளையாட்டு போட்டிகளும் நினைவு கூரல் கூட்டமும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# கப்பல் மூலம் யூரியா வடபகுதிக்கு கடத்த முயற்சி

## நான்கு முகவர்கள் கைது

(கொழும்பு)

றுகுணு கப்பல் மூலம் 250 மூடை யூரியா உரம் கடத்த முயன்றதாக கூறி நான்கு போக்குவரத்து முகவர்களை சிறிலங்கா துறைமுகப் பொலிசார் கைது செய்துள்ளனர். இக்கப்பலில் யாழ்ப்பாணம் விவசாயசேவை சிரேஷ்ட உதவி ஆணையாளருக்கு எடுத்துச் செல்ல என ஏற்றப்பட்ட 950 மெற்றிக் தொன் அமோனியாவுடன் இவ் 250 மூடை யூரியாவும் ஏற்றப்பட்டதாகவும் கூறப்படுகின்றது

இது தொடர்பாக இவ் உரத்தைத விநியோகித்த கொழும்பு புறக்கோட்டையைச் சேர்ந்த இரு வர்த்தகர்களும் விசாரிக்கப்படுவதாகவும் மேலும் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் றுகுணுவின் வருகை தாமதம் அடையும் எனவும் தெரியவருகிறது.

---

## நேர்முகப் பரீட்சை

நமது நிருபர்

மத்திய மற்றும் வடகிழக்கு மாகாண கல்வியமைச்சுக்களினால் கோரப்பட்ட சிற்றூழியர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ் கல்வித் திணைக்களத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாடசாலைத் தொழிலாளர் சுகாதாரத் தொழிலாளர் மற்றும்காவலாளிகளுக்கே இந்நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இந் நேர்முகப்பரீட்சைகளை மூன்று கல்வி அதிகாரிகள் நடாத்தவுள்ளனர் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. [பா]

---

றொக்கட்

பெற்றபோது புக்காரா விமானம் ஒன்று அப்பகுதியில் குண்டுகளை வீசியது

பின்னர் இரவு நான் குடும்பத்தினருடன் மேடைக்கு அண்மையாகஇருந்து நிகழ்ச்சிகளை ரசித்துக் கொண்டிருந்தேன் அப்பகுதி முழுவதும் வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது

நிகழ்ச்சிகளை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்ததால் புக்காரா விமானம் வந்ததை யாரும் கவனிக்கவில்லை. அது திடீரென வந்த உடனேயே றொக்கற் தாக்குதலை நடத்தி விட்டது.

அது எங்கள் மத்தியில் வீழ்ந்து வெடித்தபின்தான் அது பற்றி உணரமுடிந்தது. சற்றும் எதிர்பாராது நிகழ்ந்ததாலேயே நான் காயமடைய நேர்ந்தது. திடீரென மின்சாரம் நின்றதால அப்பகுதி எங்கும் இருட்டாக இருந்தது. என் உடலில் சன்னங்கள் பட்டதால் எரிவு உண்டாகியது. நான் உடனேயே நிலத்தில் சாய்ந்துவிட்டேன் அப்போது அங்கிருந்தவர்கள் எல்லோரும் அபயக்குரல் எழுப்பியவாறு நாலாபுறமும் சிதறி ஓடியதைக் கண்டேன். பலர் என்னை ஏறிமிதித்துக்கொண்டும் என்னில் தடக்குப்பட்டு வீழ்ந்து எழுந்தும் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர். சிலவிநாடிகளில் காயமடைந்தவர்கள் ஆங்காங்கே வீழ்ந்து கிடந்தவாறு கத்தும் சத்தம் கேட்டது. அப்போ அங்கு விரைந்து வந்த விடுதலைப்புலிகள் எங்கள் எல்லோரையும் தூக்கி வாகனத்தில் ஏற்றி புதுக்குடியிருப்புஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய் சேர்த்தனர் அங்கே எங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டபின் சிலர் வவுனியாவிற்கும் சிலர் கிளிநொச்சிக்கும் சிலர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர் என்றார்.

# திலீபன் ஞாபகார்த்த அறிவாலயம் திறப்பு

[மன்னார்]

தியாகி திலீபனின் ஆறாம் ஆண்டின் இறுதி நாள் நிகழ்வாக மன்னார் மாவட்டத்தில் திலீபன் ஞாபகார்த்த அறிவாலயம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பள்ளமடுவில் எதிர்வரும் 26 ஆம் திகதி தியாகி திலீபனின் இறுதி உண்ணாவிரத நாளன்றே இவ் அறிவாலயம் பள்ளமடு கூராய் சிற்றூரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பலிகளுக்கு தொடர்ந்து உதவினால்

# 2000 ஆம் ஆண்டிலும் பிரச்சினை தொடரும்

[மட்டக்களப்பு]

"புலிகளுக்கு அரசாங்க அதிகாரிகள்தொடர்ந்து உதவிவழங்கினால்2000ஆம ஆண்டிலும் பிரச்சினை தீராது" என பிரிகேடியர் றோகான் குணவர்த்தனதெரிவித்தார்.

மட்டக்களப்பு கச்சேரியில் அரச அதிபர் தலைமையில் நடந்த அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய றோகான் குணவர்த்தன கூறுகையில்; மட்டக்களப்பு மாவட்டத்தில் 'அமைதியைக் கொண்டுவருவதற்கு ஒருசில திணைக்களத் தலைவர்களின் செயற்பாடுகள் தடையாக உள்ளன. அரசநிதியையும், சொத்துக்களையும் புலிகளுக்கு வழங்கிவருவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இவை ஆதார பூர்வமான தகவல்கள் ஆயின் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவ்

---

துப்பாக்கிப்

புரம் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டனர்.

சுமார் 45 நிமிட நேரம் தொடர்ச்சியாக நடைபெற்ற இத் தாக்குதலின்போது வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகள் பாதுகாப்புக் கருதி தமது முயற்சியினை

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 20-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10990

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

24-5734, 26-0547, 24-4917, 22-4895, 27-1292.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்!

41-8823, 24-5460, 26 4809, 27-1380. 26-2941, 24-5529, 26-5848, 26 7949, 43-5726. 24-5707, 28-4367, 27-9033, 24-6489, 26-3473, 26-9755, 24-6336, 41-1092, 24-6855, 42-0970.

பாஷையூர்-கொழும்புத்துறை வர்த்தக அமைப்பு

மானிப்பாய்.

றெஜி புத்தகசாலை
ஆஸ்பத்திரி முன்பாக மானிப்பாய்.

செல்வரத்தினம் புத்தகசாலை
சங்கானை.

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

சிவசக்தி களஞ்சியம்
கைதடி சந்தி, கைதடி.

எ. எஸ். ரி. புத்தகசாலை
ஸ்ரேசனடி கோட்டடி
15, கண்டி வீதி, சாவகச்சேரி.

சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் அன் புத்தகசாலை
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

ஆசீர்வாதம் புத்தகசாலை
28, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி.

அருள்நாயகி புத்தகசாலை
பஸ்நிலையம் முன்பாக
கொடிகாமம்.

சாந்தி ஸ்ரோர்ஸ் அன் அழகுசாதன பொருட்கள் விற்பனை நிலையம்
மருதடி, பிரதான வீதி, பருத்தித்துறை

கமலா புத்தகசாலை
பிரதான வீதி, பருத்தித்துறை.

கலைச்சோலை புத்தகசாலை
வல்வெட்டித்துறை.

M. P. தர்மலிங்கம் புத்தகசாலை
உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி.

நாவலர் புத்தகசாலை
பஸ் தரிப்பு நிலையம் அருகில்
மந்திகை.

நவீன களஞ்சியம் அன் மொடேர்ண் ஸ்ரோர்ஸ்
நெல்லியடி சந்தி, கரவெட்டி.

லக்சுமி ஸ்ரோர்ஸ்
நெல்லியடி, பஸ்நிலையம். (சி-7456)

டுக் கொள்ளப்படுகிறார்கள். இவர்கள் வைத்தியசாலை வளாகத்திற்குள்வர ஊழியர் நுழைவாயிலைப் பயன்படுத்து மாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## நீண்டகால

படலாம் எனக் குறிப்பிட்டனர்.

வடக்கில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்க முன் சீனாவிலிருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்ய பேச்சுகள் நடைபெறுகின்றன. சுமார் 1000கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் இறக்குமதிசெய்யப்படவுள்ளன. வருட இறுதிக்குள் இங்கு வந்து சேர வேண்டிய ஆயுதங்களை இன்னும் ஒரிரு மாதங்களுள் இங்கு எடுத்து வருவதே பாதுகாப்பு அமைச்சின் நோக்கம் என்றும் வீரகேசரி செய்தி வெளியிட்டுள்ளது.

# 2000 ஆம் ஆண்டிலும் பிரச்சினை தொடரும்

[மட்டக்களப்பு]

"புலிகளுக்கு அரசாங்க அதிகாரிகள்தொடர்ந்து உதவிவழங்கினால்2000ஆம ஆண்டிலும் பிரச்சினை தீராது'' என பிரிகேடியர் றோகான் குணவர்த்தனதெரிவித்தார்.

மட்டக்களப்பு கச்சேரியில் அரச அதிபர் தலைமையில் நடந்த அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய றோகான் குணவர்த்தன கூறுகையில்; மட்டக்களப்பு மாவட்டத்தில் 'அமைதியை'க் கொண்டுவருவதற்கு ஒருசில திணைக்களத் தலைவர்களின் செயற்பாடுகள் தடையாக உள்ளன. அரசநிதியையும், சொத்துக்களையும் புலிகளுக்கு வழங்கிவருவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இவை ஆதாரபூர்வமான தகவல்கள் ஆயின் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு புலிகளுக்கு தொடர்ந்து உதவினால் 2000ஆம் ஆண்டிலும் பிரச்சினை தீராது'' என்றார்.

## துப்பாக்கிப்

புரம் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டனர்.

சுமார் 45 நிமிட நேரம் தொடர்ச்சியாக நடைபெற்ற இத் தாக்குதலின்போது வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகள் பாதுகாப்புக் கருதி தமது முயற்சியினை கைவிட்டு பாதுகாப்பான இடங்களை நாடினர். இத் தாக்குதலினால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது. (41)

# மீண்டும் ஆரம்பம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதியினால் நடாத்தபபட்டு பின்னர் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பயிற்சி வகுப்பு மீண்டும் பின்வரும் நேர அட்டவணைப்படி நடைபெறவுள்ளது என்பதை பயிற்சியாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகிறோம்.

காலம்:- 22-09-1993 தொடக்கம் 02-10-1993 வரை

| திகதி | நேரம் | விடயம் |
|---|---|---|
| 22-09-1993 | 9-30 — 10-30 | வீட்டு மின் இணைப்பு |
| | 11-00 — 12-30 | " |
| | 2-00 — 4-00 | மோட்டார் றிவைண்டிங் |
| 23-09-1993 | 9-30 — 10-30 | பொறியியல் வரைதல் |
| | 11-00 — 12-30 | " " |
| | 2-00 — 4-00 | அமைப்புக்கள் வரைபடம் ஆக்குதல் |
| 24-09-1993 | 9-30 — 10-30 | உயிர்வாயு கூடம் |
| | 11-00 — 12-30 | " " |
| | 2-00 — 3 00 | இரட்டைச் சூட்டடுப்பு |
| | 3-00 — 4-30 | காற்று மின் பிறப்பாக்கி |
| 25-09-1993 | 9-30 — 10-30 | திட்டங்களை இனங்கண்டு திட்டறிக்கை தயாரித்தல் |
| | 11-00 — 12-30 | " " " " |
| 27-09-1993 | 9-30 — 10-30 | ஏற்று / சூத்திரம் |
| | 11-00 — 12-30 | காற்றாலை |
| | 2 00 — 4-00 | பம்பிகள் |
| 28-09-1993 | 9-30 — 10-30 | துவிச்சக்கர வண்டியினை முற்றாக கழற்றி மீண்டும் பொருத்துதல் |
| | 11-00 — 12-30 | துவிச்சக்கர வண்டியினை " " " பொருத்துதல் |
| | 2-00 — 4-30 | மோட்டார் இயந்திர சாஸ்திரம் |
| 29-09-1993 | 9-30 — 10-30 | மோட்டார், துவிச்சக்கர வண்டியினை முற்றாக கழற்றி மீண்டும் பொருத்துதல் |
| | 11-00 — 12-30 | மோட்டார், துவிச்சக்கர வண்டியினை முற்றாக கழற்றி மீண்டும் பொருத்துதல் |
| | 2-00 — 4-30 | மோட்டார், துவிச்சக்கர வண்டியினை முற்றாக கழற்றி மீண்டும் பொருத்துதல் |
| 01-10-1993 | 9-30 — 10-30 | சக்தியின் இன்றைய உடனடித் தேவைகள் |
| | 11-00 — 12-30 | சக்திப் பகுதியின் கட்டமைப்பு |
| | 2-00 — 4 00 | பரீட்சை |
| 02-10-1993 | 9-30 — 10-30 | ஆய்வுகள் |

(சி-7454)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 20-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10990

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

24-5734, 26-0547, 24-4917, 22-4895, 27-1292.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்!

41-8823, 24-5460, 26 4809, 27-1380. 26-2941, 24-5529, 26-5848, 26 7949, 43-5726. 24-5707, 28-4367, 27-9033, 24-6489, 26-3473, 26-9755, 24-6336, 41-1092, 24-6855, 42-0970.

பாஷையூர்-கொழும்புத்துறை வர்த்தக அமைப்பு

# முக்கிய அறிவித்தல்

தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளை முன்னெடுக்க எமது வர்த்தக அமைப்பு [23-09-93] வியாழக்கிழமை பாஷையூர் சூர்ச். அந்தோனியார் ஆலய முன்றலிலும், (24-09-93) வெள்ளிக்கிழமை கொழும்புத்துறை சந்தை முன்றலிலும் ஒவ்வொரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அந்தினங்களில் அவ்வப் பகுதிகளைச் சேர்ந்த சகல வர்த்தகர்களும் தமது ஸ்தாபனங்களைப் பூட்டி காலை 7.00 மணிமுதல் உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஆ. சாந்தலிங்கம் — தலைவர்
ச. தவசிலன் — செயலாளர்

[6063]

# மரண அறிவித்தல்

திருமதி

## தவமணி கார்த்திகேசு

காரைநகர் சருங்காலியைச் சேர்ந்தவரும் தற்போது ஆனைக்கோட்டையில் வசிப்பவருமாகிய திருமதி தவமணி கார்த்திகேசு நேற்று (20. 9. 93ல்) காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு/திருமதி முருகேசுவின் (மலாயன் பென்சனியர்) அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையா கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம், பாலராணி (ஈழநாதம்), பாலகிருஷ்ணன் (கிளிநொச்சி), பாலச்சந்திரன், மாவீரன் பாலேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வர்ணகுலசிங்கம் (மலேசியா), திருமதி மகேஸ்வரி சிவரட்ணம், திருமதி பரமேஸ்வரி நந்தகோபால், ஆறுமுகம் (லண்டன்), காலஞ்சென்ற நடராசா, நவரட்ணம (கிளிநொச்சி), திருமதி அம்பிகாதேவி நடேசன் (கொழும்பு), அருட்பிரகாசம் (சிறீலங்கா அச்சகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (20. 9. 93) அன்று ஆனைக்கோட்டையில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

'லிங்க வாசம்'
கட்டபபாலி லேன்,
ஆனைக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்

(இ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.